**கலேவல பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலேவல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கும் இடையே 11 வருடங்களுக்கு முன்னிருந்து காணப்படுகின்ற ரூபா 2,306,909 தொகையான வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) கிடைக்க வேண்டிய ரூபா 7,075,712 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதியும் சமமான பெறுமதியுடைய கடன்கொடுத்தோர் மீதியும் சபையிடம் காணப்பட்ட ரூபா 232,650 தொகையான 99 கூட்டுப்பசளை பாத்திரங்களின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

(இ) கொள்வனவு செய்யப்படாத மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் ரூபா 1,715,950 பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் சமமான பெறுமதியால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் மீதி ரூபா 41,156 அதிகரித்தும் மீளாய்வாண்டிற்குரிய கடன் தவணைப்பணம் மற்றும் வட்டி என்பன ரூபா 146,587 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) முன்யை ஆண்டுகளுக்குரிய ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,054,440 தொகையான பங்களிப்புப் பணம் வருமானச் செலவினக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மாகாண சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெற்ற 281 கல்வனைஸ் குழாய்களின் பெறுமதியான ரூபா 311,067 தொகையானது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 262,401,269 தொகையான 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளுக்கும் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 219,018,117 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,705,840 ஆக இருந்ததுடன் 5 வருட காலத்தை விஞ்சிய ரூபா 782,898 கூட்டுத்தொகையான 05 மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கடன்கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 66,843,088 ஆக இருந்ததுடன் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,054,440 தொகையான மீதியும் அதில் உள்ளடங்கி உள்ளது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 144,235,221 கூட்டுத்தொகையான 10 கணக்கு விடயங்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காண்பிக்கப்படுகின்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 189 | முன்னைய 03 வருடங்களில் கிடைத்திருந்த ரூபா 60,517 தொகையான 03 காசோலைகள் மதிப்பிழந்திருந்த போதிலும் தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 02 வருடங்களை கடந்த ரூபா 1,579,021 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக உரிய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.7 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஏ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சரின் முன் அங்கீகாரம் இன்றி வரவேற்பு விழாவிற்காக ரூபா 55,040 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,836,141 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,562,387 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 5,273,754 அதிகரிப்பைக் காண்பித்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 ஆதன வரி

நிலுவையாக இருந்த ஆதன வரி மீதி ரூபா 956,295 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய ரூபா 169,075 தொகையான மீதியும் உள்ளடங்கியிருந்தது.

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணம்

05 வருடங்களுக்கு முன்பிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண மீதி ரூபா 691,370 ஆக இருந்த போதிலும் அந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

(அ) மதிப்பீடு செய்யப்பட்டு 14 வருடங்கள் கடந்திருந்த போதிலும், 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 02 மற்றும் 08 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் 6 சந்தைத் தொகுதிகளின் வாடகையை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 08 வருடங்கள் முதல் 28 வருடங்கள் வரையிலான காலத்திற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் சபைக்குச் சொந்தமான 43 கடைகளில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலுவையாக இருந்த வாடகை மீதி ரூபா 127,775 ஆக இருந்ததுடன், 2004 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து அறவிட வேண்டிய ரூபா 84,580 தொகையான இறைச்சிக் கடை வாடகை மீதியும் அதில் உள்ளடங்கியிருந்தது.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 2,965,050 தொகையும், முத்திரைக் கட்டணமாக ரூபா 7,044,363 தொகையும் அறவிடவேண்டியிருந்தன.

**2.2.5 ஏனைய வருமானம்**

இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 மிகைக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணங்களுக்குரிய ரூபா 226,000 தொகை அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல் மதிப்பீடு

மீளாய்வாண்டிற்குரிய மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 47,685,473 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 25,454,811 தொகை அதாவது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 53 சதவீதம் சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது. அதில் ரூபா 5,575,257 தொகை மீளளிக்கப்படாமையின் காரணமாக சபை நிதியத்திலிருந்து செலவிடவேண்டி ஏற்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

2008 ஆம் ஆண்டின் போது முறையான அங்கீகாரமின்றி புதிய சந்தைத் தொகுதியின் முதலாவது மாடியை கந்துரட்ட அபிவிருத்தி வங்கிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகைப்பணம் 05 வருடங்களின் பின்னர் திருத்தப்படாமையினால் சபைக்கு ரூபா 513,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. மின்சார இணைப்பையும் சபையின் பெயரில் பெறாது கந்துரட்ட வங்கியின் பெயரில் எடுப்பதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டிருந்தது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டிடத் திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டிலும் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் கிடைக்கப் பெற்ற 220 கட்டிட விண்ணப்பங்களில் 126 விண்ணப்பங்களுக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் இணக்கச் சான்றிதழ் அதில் 32 விண்ணப்பங்களுக்காக மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன.

## 3.4 விளைவற்ற / குறைவான பயன்பாடுடைய சொத்துக்கள்

ரூபா 597,400 கிரயமான 02 வாகனங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

**3.5 இனங்காணப்பட்ட நட்டம்**

மாகாண சபை மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் மூலம் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதம் வழங்கப்பட்ட கல்வனைஸ் குழாய்களில் ரூபா 84,132 கிரயமான 76 குழாய் அலகுகளின் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(i) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான அங்கீகாரம் பெறப்படாது. 18 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 2,090,307 தொகையான சம்பளம் மற்றும் படிகள் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**3.7 ஒப்பந்த நிர்வாகம்**

கீழே காண்பிக்கப்படுகின்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | நிதியேற்பாடு | வேலையின் பெயர் | செலவிடப்பட்ட தொகை | பௌதீகப் பரிசோதனைத் திகதி | குறைபாடுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ‘‘ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை’’ இன் கீழ் நிதியேற்பாடு | யட்டிவெஹர கம்மெத வீதி அபிவிருத்தி செய்தல் | 516,099 | 2015.02.23 | 36.2 கொங்கிறீட் கன மீற்றருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 25.9 கன மீற்றர் மாத்திரம் போடப்பட்டிருந்தமையால் 10.3 கன மீற்றருக்காக ரூபா 130,109 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ‘‘ஒரு கிராமத்திற்கு | யட்டிவெஹர பலமல்பொத்த வீதிக்கு கொங்கிரீட் இடல் | 437,549 | 2015.02.23 | 33.42 கொங்கிறீட் கன மீற்றருக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 29.5 கன மீற்றர் மாத்திரம் போடப்பட்டிருந்தமையால் |

| | |
|---|---|
| ஒரு வேலை'' இன் கீழ் நிதியேற்பாடு | 3.92 கன மீற்றருக்காக ரூபா 49,764 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது |

### 3.8 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

மத்திய மாகாண சுற்றாடல் அமைச்சிலிருந்து கிடைத்த ரூபா 3 மில்லியன் நிதி உதவியின் கீழ் 2010 ஆம் ஆண்டின் போது மேவுகையுடன் கூடிய கழிவுகளை அகற்றும் 02 வடிகாண்கள் மற்றும் கழிவுப் பொருட்களை தெரிவு செய்வதற்கான தளம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் நாளாந்தம் சேகரிக்கப்படுன்ற 2.5 மெற்றிக் தொன் அளவிலான கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டுப்பசளை உற்பத்தி செய்து விற்பனை செய்தல் இச்செயற்திட்டத்தின் இலக்காக இருந்தது. நிலையத்தில் உள்ள 02 வடி காண்களில் 02 ஆம் இலக்க வடி காண் மழை நீரினால் நிரம்பி முழுமையாக செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் 01 ஆம் இலக்க வடிகாணும் முழுமையாக கழிவுகளினால் நிரம்பி இருந்தமையால் கழிவுப் பொருட்கள் உக்காமையினால் செயல்திட்டம் வெற்றியளிக்காத நிலையில் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவை 5(7) விதியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சிபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுஉருவாக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அந்தக் குழுவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

(அ) 14 வருமான விடயங்களின் ரூபா 38,810,000 தொகையான மதிப்பிடப்பட்ட வருமானங்களில் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் மேலும் 10 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கிடையே 09 சதவீதம் முதல் 67 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(ஆ) 10 செலவின விடயங்களுக்கான ரூபா 533,000 தொகையான மொத்த நிதி ஏற்படும் சேமிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் 30 செலவின விடயங்களின் தேறிய நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 09 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன.

(இ) மீளாய்வாண்டில் பாதீடு திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டதன் பின்னர் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமான செலவினங்களுக்கிடையே கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்